நுண்டுக்குளி நிலை நூலகம்

Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 20 | (06 - 10 - 1992) | செவ்வாய்க்கிழமை | ஓசை 231

## யாழ். பிறப்புப் பதிவிற்கு மலையக விண்ணப்பப் படிவம்

யாழ் போதனா வைத்தியசாலையில் மகப்பேறு நிகழும் சமயங்களில் பதிவுக்காக வழங்கப்படும் பத்திரங்களுக்குப் பதிலாக ''தோட்டங்களில் பிறப்பு நிகழ்ந்ததை பதிவுசெய்தல்'' எனும் தலைப்பிலான விண்ணப்ப பத்திரங்களேவழங்கப்பட்டுவருகின்றன. மேற்படி விண்ணப்பப் படிவங்களில் தோட்ட உத்தியோகத்தர், கங்காணி போன்றோரின் உறுதிமொழிகளும் கோரப்பட்டுள்ளன. இந்திய வம்சாவளியினருக்கான தகவல் நிரப்பும் வெற்றிடங்களே மேற்படி படிவத்தில் காணப்படுகிறது. மேலும் பிறப்பை உறுதிப்படுத்தும் வைத்திய அதிகாரியின் கையொப்பமிடவும் மேற்படி படிவங்களில் இடம் காணப்படவில்லை. (4 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் போர் யுக்திகள்; சிங்கள ராணுவ தரப்பில் குழப்பம்

## மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

பதவியாவில் மினிமுகாம் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் அத்தி (கணபதிப்பிள்ளை விஜயசேனன் ஸ்கந்தபுரம்) லெப். அரவிந்தன் (தங்கவேல் ரவி ஜெயந்திநகர்) ஆகியோரின் புகழ் உடல்கள் கடந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த ராணுவ நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு வட்டாரங்களில் தடுமாற்றம்

விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் போர்த் தந்திரோபாயங்கள் சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் குழப்பத்தையும், அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானங்கள் மேற்கொள்வதில் சிக்கல்களையும் ஏற்படுத்தியிருப்பதாகவும் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழின் இராணுவச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தரப்பில் எழும் சந்தேகங்கள் குழப்பங்கள் குறித்து மேலும்அப்பத்திரிகையாளர் தெரிவிக்கையில் மாதகல் நோக்கி இராணுவம் நகர்ந்த போது புலிகளிடம்இருந்து சிறிதளவு எதிர்ப்புதான் கிடைத்தது. இது ஒரு எல்லைக்குட்பட்ட அளவல்-சிறிய அளவிலதாக தாக்குதல் ஒன்றைத்தான் இராணுவத்தினர் மேற்கொள்கின்றனர் என்றவிடயம் புலிகளுக்கு முன் கூட்டியே தெரிந்திருந்தமையால் தான் அவர்கள் சண்டையைத் தவிர்த்துக் கொண்டார்களா? அல்லது இராணுவத்தினரை முன்னோக்கி நகரவிட்டு பின்னர் இடைமறித்து பெருமளவிற் தாக்கும் தந்திரோபாயத்தின் பாற்பட்டதாக இருந்திருக்குமா என்பது குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளதாகவும் அச்செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

வடக்கு யுத்த முனையில் கடந்த சில வாரங்களில் நடந்த சம்பவங்களை உன்னிப்பாகக் கவனிக்கும்போது எதிர்காலத்தில் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு புலிகளால் ஏற்படக் கூடிய அபாயங்கள் குறித்தும் பெரிதுபடுத்தி ஆலோசிக்க வேண்டியுள்ளது என்று அப்பத்திரிகை இராணுவச் செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

மேலும் முன்னணிப் பாதுகாப்பு அணிகளை இதுவரை காவலும் தாக்கி வந்த புலிகள் ஏற்படுத்தி வருகிறார்கள் என்றும் இராணுவச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குறிப்பாக கட்டைக்காடு இராணுவ மினி முகாமிலிருந்து பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதை அடுத்து புலிகளின பலம் கணிசமான அளவில் அதிகரித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கருதுகின் (4 ஆம் பக்கம் பார்க்க)

### படையினர் பதுங்குகுழிவேய கிடுகுகள் தேவையாம்

வடக்கு - கிழக்கில் பருவமழை ஆரமபித்துள்ளதால் யுத்தமுனையில் உள்ள இராணுவத்தினரின் பதுங்கு குழிகளைவேய 75,000கிடுகுகளை தந்துதவுமாறு சிங்கள ஆராக்ஷக சற்விதானயத் தலைவர் காமினி ஜெயசூரியா கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ள யுத்தமுனைகளைப் பார்வையிட்ட பிறகே இவர் இவ்வாறு கோரியுள்ளார். யுத்தமுனைகளில் பருவமழை காலத்தில் இராணுவத்தினர் இரவு பகலாகப் பதுங்கு குழிகளிலேயே சீவிப்பதாக ஜெயசூரியா மேலும் தெரிவித்துள்ளார்.

### குற்றச் செயலில் ஈடுபட்ட பொலிசார் வேலை நீக்கம்

கொழும்புத் துறைமுகத்தினுள்

## சகல வசதிகளைக் கொண்ட கடற்படை முகாம் அமையும்

சிறிலங்கா கடற்படைக்கென கொழும்புத் துறைமுகத்துக்குள் முழுவசதிகளுடன் கூடிய கடற்படை முகாம் ஒன்றை அமைக்கும் பணிகளை இலங்கைத் துறைமுக அதிகார சபை இப்போது மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய முகாமின் நிர்மாணப் பணிக்கென துறைமுக அதிகார சபை 21 கோடி ரூபாவினை செலவிடும் என்றும்,

இங்கு 700 கடற்படையினரும் அதிகாரிகளும் தங்குவதற்கான பூரண வசதிகளையும் இந்த முகாம் கொண்டிருக்கும் என்றும், இம்முகாம் ஐந்து மாடிகளைக் கொண்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### சிறிலங்கா கடற்படைக்கு சிறியவேகம்கூடியகப்பல்கள்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினருக்கென ஒன்பது கோடி ரூபா செலவில் வேகம் கூடிய சிறு கப்பல்கள் கட்டப்படவுள்ளன

இத்தகைய நான்கு கப்பல்களைக் கட்டும்வேலை அடுத்த வாரம் கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இக்கப்பல்களைக் கட்டும் வேலையை ''டொக்யாட்'' நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

## பல்லாயிரக் கணக்கான மக்கள் பன்னிரு மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

இந்திய-இலங்கைஅரசுகளின் கூட்டுச்சதிக்குப் பலியாகிய தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரு மாவீரர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவை ஒட்டி இவ்வேங்கைகளது புகழுடல்கள் தீயுடன் சங்கமமாகிய தீருவில் திடலில் பிரமாண்ட ... நகர்ந்து வந்தன. இம்மைதானத்தில் இருந்து பன்னிரண்டு பெரியளவிலானபுகைக்கூடுகள் வானத்தில் பறக்கவிடப்பட்... கள் ஆரம்பமாகின.

கடற்புலிகளின் தளபதி திரு சூசை தேசியக்கொடியை ஏற்றிவைத்ததுடன் ஈகை...

குறித்து மேலும் அப்பத்திரிகையாளர் தெரிவிக்கையில் மாதகல் நோக்கி இராணுவம் நகர்ந்த போது புலிகளிடம் இருந்து சிறிதளவு எதிர்ப்புததான் வினதாக தாக்குதல் ஒன்றைத் தான் இராணுவத்தினர் மேற் கொள்கின்றனர் என்றவிடயம் புலிகளுக்கு முன் கூட்டியே தெரிந்திருந்தமையால் தான் லது இராணுவத்தினரை முன்னோக்கி நகரவிட்டு பின்னர் இடைமறித்து பெருமளவிற் தாக்கும் தந்திரோபாயத்தின் பாற்பட்டதாக இருந்திருக்குமா என்பது குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளதாகவும் அச்செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

வடக்கு யுத்த முனையில் கடந்த சில வாரங்களில் நடந்த சம்பவங்களை உன்னிடபார்க்க் கணிக்கும்போது எதிர் காலத்தில் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு புலிகளால் ஏற்படக் கூடிய அபாயங்கள் குறித்தும் பெரிது படுத்தி ஆலோசிக்க வேண்டியுள்ளது என்று அப்பத்திரிகை இராணுவச் செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

மேலும் முன்னணிப் பாதுகாப்பு அணிகளை இதுவரை காலமும் தாக்கி வந்த புலிகள் கடந்த சில மாதங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னணி பாதுகாப்பு அணி முகாம்களின் மீது தாக்குதல்களை நடத்தி பாரிய இழப்புகளை

குறிப்பாக கட்டைக்காடு இராணுவ மினி முகாமிலிருந்து பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதை அடுத்து புலிகளின பலம் கணிசமான அளவில் அதிகரித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கருதுகின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

சபை இப்போது மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய முகாமின் நிர்மாணப் பணிக்சென துறைமுக அதிகார சபை 21 கோடி ரூபாவினை செலவிடும் என்றும்,

இங்கு 700 கடற்படையின

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினருக்கென ஒன்பது கோடி ரூபா செலவில் வேகம் கூடிய சிறு கப்பல்கள் கட்டப்படவுள்ளன

இத்தகைய நான்கு கப்பல்களைக் கட்டும்வேலை அடுத்த வாரம் கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இக்கப்பல்களைக் கட்டும் வேலையை "டொக்யாட்" நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

## படையினா பதுங்குகுழிவேய கிடுகுகள் தேவையாம்

வடக்கு - கிழக்கில் பருவ மழை ஆரம்பித்துள்ளதால் யுத்தமுனையில் உள்ள இராணுவத்தினரின் பதுங்கு குழிகளைவேய 75,000 கிடுகுகளை தந்துசவுமாறு சிங்கள ஆராக்ஷக சற்விதானயத் தலைவர் காமினி ஜெயசூரியா கோரிக்கை விடுததுள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ள யுத்தமுனைகளைப் பார்வையிட்ட பிறகே இவர் இவ்வாறு கோரியுள்ளார். யுத்தமுனைகளில் பருவமழை காலத்தில் இராணுவத்தினர் இரவு பகலாகப் பதுங்கு குழிகளிலேயே சீவிப்பதாக ஜெயசூரியா மேலும் தெரிவிததுள்ளார்.

## குற்றச் செயலில் ஈடுபட்ட பொலிசார் வேலை நீக்கம்

(மாத்தறை)

ஒழுங்கீனமான முறையில் நடந்து கொண்டதாகவும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டு தென்னிலங்கையில் பதினொரு பொலிஸ் உத்தியோகஸ்தர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தென்மாகாண சிரேஷ்ட பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஒருவர் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதாக கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இப் பதினொரு பேருக்கும் எதிரான விசாரணைகள் முடிவடைந்த பின்னரே அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். என்றும் தெரிவிக்கப்படுகிறது

இவ்வாறான சட்டவிரோத சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் மேலும் பல பொலிஸார் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அப் பொலிஸ் உயரதிகாரி மேலும் தெரிவித்தார்,

## பல்லாயிரக் கணக்கான மக்கள் பன்னிரு மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச்சதிக்குப் பலியாகிய தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளுக்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்

பன்னிரு வேங்கைகளது ஐந்தாம் ஆண்டு நினைவை ஒட்டி இவ்வேங்கைகளது புகழுடல்கள் தீயுடன் சங்கமமாகிய தீருவில் திடலில் பிரமாண்டமான அஞ்சலிக்கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது இந்த நினைவஞ்சலிக் கூடடத்திற்கு குடாநாட்டின் அனைத்து வட்டப் பிரிவுகளிலிருந்தும் அணி வகுத்துவந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் வெள்ளம் தீருவில் திடலை ஜனசமுத்திரமாககியது

இவ்வேங்கைகளது உருவப் படங்களைத் தாங்கிய ஊர்திகளும் மைதானத்தை நோக்கி நகர்ந்து வந்தன. இம்மைதானத்தில் இருந்து பன்னிரண்டு பெரியளவிலானபுகைக்கூடுகள் வானத்தில் பறக்கவிடப்பட்டன

தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலுடன் அஞ்சலி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கடற்புலிகளின் தளபதி திரு சூசை தேசியக்கொடியை ஏற்றிவைத்ததுடன் ஈகைச் சுடரையும் ஏற்றிவைத்தார்.

திரு தமிழ்ச்செல்வன், திரு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலியின் சூட்டுக்கு படகோட்டிகள் இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

பூநகரி நலலூரிலிருந்து கிளாலிக்கு தேங்காய் ஏற்றி வந்த பிளாஸ்ரிக் படகின் மீது சிறிலங்கா விமானப்படையினரின் உலங்குவானூர்தியொன்று தாக்குதல் நடத்தியதில் படகோட்டிகள் இருவரும் பலியாகினர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை நடைபெற்ற மேற்படி தாக்குதல் சம்பவத்தில் ஐந்து பிள்ளைகளின் தந்தையாராகிய யோன்பிள்ளை மிகேல்சாமி (வயது 45 மண்டை தீவு 4 ஆம் வட்டாரம்) அதேயிடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையாராகியதாவீது பெஞ்சமின் (வயது 25) ஆகியேரே பலியாகியவர்களாவர்.

படகோட்டிகளை இழந்த அப்படகு நடுக்கடலில் அநாதரவாக நின்றதெனவும் இவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடிமனைகள் மீது எறிகணைத் தாக்குதல்

அளவெட்டி வடக்கு, தெல்லிப்பளை பகுதிகளை நோக்கி வலிவடக்கு பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று நண்பகல் பலத்த எறிகணை வீச்சு நடாத்தியுள்ளனர்.

சுமார் ஒருமணி நேரத்திற்குள் பத்திற்கு மேற்பட்ட எறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### குற்றவியல் சட்டத்தின் கீழ் கைதானோரை

## 90 நாள்கள் காவலில் வைத்திருக்க அனுமதிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

குற்றவியல் சட்டத்தின்கீழ் தடுப்புக்காவலில் வைத்திருக்கும் காலத்தை இருபத்தி நான்கு மணி நேரத்திலிருந்து தொண்ணூறு நாள்களாக அதிகரிக்கும்படி உயர் பொலிஸ் அதிகாரிகள் அரசைக் கேட்டுள்ளனர். குற்றவியல்சட்டங்களின் தொகுப்பில் திருத்தங்களைச்செய்து இதனை அமுல் செய்யும் படியும் அவர்கள் கோரியுள்ளனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிணையில் சென்று தமக்கெதிரான சாட்சிகளை அச்சுறுத்துவதால் தடுப்புக்காவலில் வைத்திருக்கும் கால எல்லையை நீடிப்பது அவசியமானதென்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது

தற்போது அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுபவர்களை மாத்திரம் தொண்ணூறு நாள்கள் தடுத்துவைத்திருக்கப் பொலிசுக்கு அதிகாரமுள்ளது.

### தென் பகுதி அமைப்புகள்

## அவசரகால சட்டத்தை நீக்குமாறு கோரிக்கை

சிறிலங்கா அரசினால் சகல மனித உரிமை மீறல்களும் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேசமயம் அவசரகாலச் சட்டம் இவற்றையெல்லாம் நியாயப்படுத்த உதவுகின்றது எனவே இந்த அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும் என பல்கலைக்கழக மாணவர்களும், எதிர்கட்சிகளும், ம[illegible]சன அமைப்புகளும், [illegible]தித்து[illegible]றையைச் சார்ந்தவர்களும் [illegible]காரிக்கை விடுத்ததுடன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாயும் தெரியவருகிறது.

அதேசமயம் அன்று லலித் காமினி குழுவினர் அவசரகாலச் சட்டத்தை ஆதரித்தார்கள். ஆனால் அன்று இதறகெதிராக அவர்கள் செயற்பட்டிருக்கலாம் அல்லது வடக்குகிழக்கிற்குமட்டும் என மட்டுப்படுத்தப்பட்டிருக்கலாம் ஆனால் அப்படிச் செய்யவில்லை

அவசரகாலச் சட்டத்தை நீக்கினால் தற்சமயம் சிறையில் உள்ள 8000 பேர் வெளியில் வந்துவிடுவார்கள் என அன்று லலித் கூறினார். இதற்காகவே லலித் அவசரகாலச் சட்டத்தை ஆதரித்தார் என இந்த அமைப்புகள் மேலும் தெரிவித்தன.

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியை பல்வைத்தியர் புறக்கணிப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குப் பல்வைத்தியப் பகுதி இருந்தும் இதற்குரிய டாக்டர் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்குச் சேவைக்காக வராததினால் பின்தங்கிய நிலையில் இருக்கும் இப்பகுதி மக்களை இது பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளது

இங்குள்ள மக்கள் பற்சிகிச்சையினை செய்வதற்கு தற்போது பெருந்தொகைப் பணத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டு 11 மாணவருக்கான முன்னோடிப் பரீட்சை

க. பொ த (சாதாரண) முன்னோடித் தேர்வு இம்மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் மூன்றாம் திகதி வரை நடைபெற உள்ளது.

இத்தேர்விற்கு தற்போது ஆண்டு 11 இல் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்கள் அனைவரும் தோற்றுவர் க. பொ த. (சாதாரண) வகுப்புகளுக்குரிய முழுப்பாடத் திட்டதிறகும் அமைவாகவே தேர்வுப் பாடங்களுக்கான வினாததாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எனவே பாடத்திட்டங்களை முற்றாகப் பூரணப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேலதிக வகுப்புகளை நடாத்தியேனும் மேற்கொள்ளுமாறு வட பிரந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்

இப்பரீட்சைக்கான நேர அட்டவணை 4 ஆம் பக்கத்தில் பிரசுரமாகி உள்ளது.

## இலங்கை திரும்பும் அகதிகளுக்கு வவுனியாவில் பாரிய முகாம்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து இலங்கை வரும் தமிழ் அகதிகள் தங்குவதற்கு வவுனியாவில் பாரியளவிலான அகதிமுகாம் ஒன்று உருவாக்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழகத்தில் இருந்து இனிமேல் இலங்கை திரும்பும் அகதிகளை தங்கவைத்து பராமரிப்பதற்காக 65 ஏக்கர் நிலத்தில் இந்த அகதி முகாம் அமைக்கப்படுகின்றது என்றும் 20,000 பேர் தங்கக் கூடியதாக பல லட்சம் ரூபாய் செலவில் இந்த முகாம் நிறுவப்படுகிறது என்றும்,

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயமே இதற்கான முழுச் செலவையும் செய்து வருகின்றது. என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம் இதழின்
விளம்பரப் பணிமனை
சாவகச்சேரி நகரின் மத்தியில்
உங்கள் அபிமானத்தைப் பெற்ற ஈழநாதம் மக்கள் தினசரியில் நீங்கள் விளம்பரங்கள் தருவதற்கு வசதியாக எங்கள் பணிமனை இயங்கி வருகிறது.
தொடர்புகளுக்கு:
திருக்கணித அச்சகம்
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

**தமிழினத்தை காக்கும் வனவளத்தை காப்போம்**

## வரி விளம்பரம்

### மனைப் பொருளியல்

மனைப் பொருளியல் மாதிரிகை வினா-விடை (ஆண்டு 10—11) வெளிவந்துவிட்டது. பரீட்சையில் அதிசிறந்த பெறுபேற்றைப்பெற உதவும் வழிகாட்டி. ஆக்கம்: செல்வி யசோதா துரைசிங்கம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (3308)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது. டில்காவாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582 Stanley Road Jaffna. (சி 5169

### யு. எஸ். எயிட் உதவி

யாழ் மாவட்டத்தில் 7 ஆயிரத்து 500 விவசாயிகள் சிறுதானிய பயிர்ச்செய்கையை மேற்கொள்ள யு. எஸ். எயிட் நிறுவனம் உதவி வழங்கி இருக்கிறது (42)

## சயன்ஸ் சென்ரர்

(எழிலகம் முன் யாழ்ப்பாணம்)

Phy: திரு.ரவீந்திரநாதன் B.Sc (Cey) Dip - In - Ed.

Che: திரு.செல்லா B. Sc (Hons)

Bot: திரு.பாலசுப்பிரமணியம்

Zoo: திரு.ஈஸ்வரதாசன் B. Sc (Cey)

Pure/App: திரு.குணசிங்கம் B. Sc(Hons)

❋ DAY CLASSES

---

யாழ்.இந்துக்கல்லூரி

பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கு

## கல்லூரி மைதான விரிவாக்கம் - கட்டம் II

மேற்படி திட்டத்திற்கு நிதி சேகரிப்பதற்கான பரிசுச் சீட்டு விற்பனை 02-10-92 அன்று கலைமகள் விழாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சங்க உறுப்பினர்கள் தயவு செய்து பொருளாளர் திரு. நா உலகநாதன் அவர்களிடமிருந்து பரிசுச் சீட்டுகளைப் பெற்று விற்பனை செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம். தயவு செய்து பொருளாளருடன் 15-10-92 இற்கு முன்னர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

பழைய மாணவர் சங்கம்
யாழ். இந்துக்கல்லூரி (சி/5163)

---

## நன்றி நவிலலும் 90 ஆம் நாள் நினைவஞ்சலியும்



| தோற்றம் | வீரச்சாவு |
|---|---|
| 21 – 09 – 1970 | 09 – 07 – 1992 |

## வீரவேங்கை அன்பழகன் (கோபாலர் விஸ்வேஸ்வரன்)

கருகம்பனை

9-7-92இல் இயக்கச்சியில் வீரச்சாவு அடைந்த அன்பழகன் [கோபாலர் விஸ்வேஸ்வரன்]க்கு இறுதி அஞ்சலியைச் செலுத்த வந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் அன்னாரின் இறுதிப் பயணம் சிறப்புற நடைபெற உதவிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், நல்லூர் கைலாச பிள்ளையார் விளையாட்டுக் கழகத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் கடந்த வருடம் 18-7-91இல் வீரச்சாவு எய்திய லெப் நெல்சன் (கோபாலர் சுந்தரேசன்) வீரச்சாவின் செய்தியைக்கேள்வியுற்று எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றி

---

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழுவோருக்கு

## யாழ். மாநகரப் பகுதியில் வீடுகட்ட 8500 ரூபாய்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகரப்பகுதியில்வசிக்கும் வறுமைக் கோட்டுக்கும் கீழ் வருமானம் பெறுபவர்களுக்கு வீடு கட்டுவதற்காக 8ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் யாழ்மாநகர சபையின் மூலம் இந்த உதவி வழங்கப்படவுள்ளது

யாழ் மாநகரப் பகுதியில் தெரிந்தெடுக்கப்படும் 20குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படும் என மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (42)

## வலி வடக்கில் புதிய பங்கீட்டு அட்டை விநியோகம்

(சுன்னாகம்)

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம் பெயர்ந்தோருக்கான புதிய நிவாரண அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன மேற்படி அட்டைகளை அவ்வவ் கிராமசேவசர் பிரிவுகளில் உடனடியாக பெற்றுக்கொள்ளும்படி உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இவ்வழங்கல் முடிவுற்றதும் இம்மாதத்திலிருந்து புதிய நடைமுறையிலான உணவு விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9) (11)

### களுத்துறையில் போலி நோட்டுகள்

(கொழும்பு)

மத்துகம, களுத்துறை ஆகிய பகுதிகளில் கைப்பற்றப்பட்ட ஆயிரம் ரூபாய் போலி நோட்டுக்கள் தொடர்பாக இரகசிய பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

கடந்த வாரம் களுத்துறையிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் மேற்படி போலி ரூபா நோட்டு வைப்புச் செய்ய வந்தபோதே அது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

---

## தவறிவிட்டது

க. சந்திரசேகரம்பிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை [460142563V] பாஸ்போர்ட் [வேலணை கிழக்கு] ஹற்றன் நஷனல் வங்கி [வவுனியா] வைப்புப்புத்தகம் இன்னும் சில ஆவணங்கள் அடங்கிய பிறவுண் நிற பிரயாணப்பை கிளாலியில் [3. 10. 92] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 81/1 சீனியர்லேன், கலட்டி,யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(3313)

---

❋ நிகழ்வுகளை நினைவுகளாகப் பதிவு செய்திட

❋ கண்ணுக்கினிய வண்ணப் படங்களாய் எப்போதும் பார்த்து மகிழ்ந்திட நாடுங்கள் !

❋ புகைப்படக் கலையில்

---

## உடுபுடைவை வழங்க யுனிசெவ் நடவடிக்கை

சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருக்கும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடுபுடைவைகளை வழங்குவதற்கு யுனிசெவ் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திடீர் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் சிறுவர்கள், பாடசாலை மாணவர்களுக்கான உடுபுடைவைகளை வழங்குவதற்காக இவ்வாறானவர்களது விபரங்களை மேற்படி நிறுவனம் சேகரித்து வருகிறது. சில முகாம்களில் ஏற்கனவே உடுபுடைவைகள் வழங்கப்பட்டுவிட்டது.

(க), (பா)

---

## 90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



வீரஜனனம்
08-08-1974

வீரச்சாவு
09 07 1992

## லெப்டினன்ட் சந்திரபவான் (அலோசியஸ்)

[சுந்தரலிங்கம்- மோகனதாஸ், தொண்டமானாறு]

[நவரெத்தினத்தின் பேரன்]

(பழைய மாணவன் -தொண்டமானாறு மகாவித்தியாலயம்)

இயக்கச்சிப் பகுதியில் நடந்த நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் அந்தியேட்டி, சபிண்டீகரண சமயக்கிரியைகளும், மதிய போசனமும் அவரது இல்லத்தில் 06-10-1992 செவ்வாய்க்கிழமை (இன்று) நடைபெற உள்ளது அத்தருணம் உற்றார், உறவினர், போராளிகள், நண்பர்கள், ஆசிரியர்கள் சகமாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் மரணச்செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மரணச்சடங்கிலும், மரண ஊர்வலத்தின்போது கலந்து கொண்டவர்களுக்கும், பூரண கும்பம் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும் மற்றும் அஞ்சலி செய்தவர்களுக்கும் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொத்தியகாடு,
தொண்டமானாறு.
(3302)

தாய், சகோதர, சகோதரிகள், பேரன், உற்றார், உறவினர் நண்பர்கள்

இருக்கிறது (42)

## சயன்ஸ் சென்ரர்

(எழிலகம் முன்
யாழ்ப்பாணம்)

Phy: திரு.ரவீந்திரநாதன்
B. Sc (Cey) Dip - In - Ed.

Che: திரு.செல்லா B. Sc (Hons)

Bot: திரு.பாலசுப்பிரமணியம்

Zoo: திரு.ஈஸ்வரதாசன் B. Sc (Cey)

Pure/App: திரு.குணசிங்கம் B. Sc(Hons)

❋ *DAY CLASSES*

❋ *PAPER CLASSES*

❋ *THEORY CLASSES*

நடைபெறுகின்றன

(சி-5168)

## வீரவேங்கை அன்பழகன் (கோபாலர் விஸ்வேஸ்வரன்)

கருகம்பனை

9-7-92இல் இயக்கச்சியில் வீரச்சாவு அடைந்த அன்பழகன் [கோபாலர் விஸ்வேஸ்வரன்]க்கு இறுதி அஞ்சலியைச் செலுத்த வந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் அன்னாரின் இறுதிப் பயணம் சிறப்புற நடைபெற உதவிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், நல்லூர் கைலாச பிள்ளையார் விளையாட்டுக் கழகத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் கடந்த வருடம் 18-7-91இல் வீரச்சாவு எய்திய லெப் நெல்சன் (கோபாலர் சுந்தரேசன்) வீரச்சாவின் செய்தியைக்கேள்வியுற்று எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் எமது இல்லத்தில் 7-10-92இல் (புதன்கிழமை) நடைபெற இருக்கும் இருவரது நினைவஞ்சலியிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

198, கோயில் வீதி, - குடும்பத்தினர்.
கைலாச பிள்ளையார் கோவிலடி,
நல்லூர்.

(3314)

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 81/1 சீனியர்லேன், கலட்டி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(3313)

❋ நிகழ்வுகளை நினைவுகளாகப் பதிவு செய்திட

❋ கண்ணுக்கினிய வண்ணப் படங்களாய் எப்போதும் பார்த்து மகிழ்ந்திட நாடுங்கள்!

❋ புகைப்படக் கலையில் புகழ்மிக்க அனுபவங்களோடு விளங்கும்

## கே.ஜி.எம்.போட்டோ

அரசடிவீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.

(சி/5170)

தொண்டைமானாறு]

[நவரெத்தினத்தின் பேரன்]


(பழைய மாணவன் -தொண்டமானாறு மகாவித்தியாலயம்)

இயக்கச்சிப் பகுதியில் நடந்த நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் அந்தியேட்டி, சபிண்டீகரண சமயக் கிரியைகளும், மதிய போசனமும் அவரது இல்லத்தில் 06- 10- 1992 செவ்வாய்க்கிழமை (இன்று) நடைபெற உள்ளது அத்தருணம் உற்றார், உறவினர், போராளிகள், நண்பர்கள், ஆசிரியர்கள் சகமாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் மரணச்செய்தி கேட்டு அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும், மரணச்சடங்கிலும், மரண ஊர்வலத்தின்போது கலந்து கொண்டவர்களுக்கும், பூரண கும்பம் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும் மற்றும் அஞ்சலி செய்தவர்களுக்கும் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொத்தியகாடு, தாய், சகோதர,
தொண்டமானாறு. சகோதரிகள், பேரன்,
(3302) உற்றார், உறவினர் நண்பர்கள்

## நூல் வெளியீட்டு விழா



காதோடு சொல்லிவிடு...

-மேஜர் பாரதி.

இந்நூல்,
தன் உள்ளத்து உணர்வுகளை எமது தேசத்தின் காதோடு சொல்லிவிட வேண்டும் என்று துடித்த மேஜர் பாரதியின் எண்ண அலைகளின் தொகுப்பு.

இடம்: விக்னேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி

காலம்: 1992-10-07மாலை 5மணி.

நிகழ்ச்சிகள்: நூல் அறிமுகம்
வெளியீட்டுரை
சிறப்புரைகள்
ஆய்வுரைகள்

தொடர்ந்து மேஜர் பாரதியின் எண்ணத்தில் கருக்கொண்ட

## சீதன அம்புகள்

நாட்டிய நாடகம் இடம்பெறும்.
ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

(சி-5150)

## சபிண்டீகரண அழைப்பு

| வீரஜனனம் | | வீரச்சாவு |
| --- | --- | --- |
| 31 |  | 26 |
| 01 | | 09 |
| 1976 | | 199. |

## லெப். கலையின்பன்

### (தியாகராஜாக் குருக்கள் இராமையா)

26- 9- 92 அன்று ஆலங்கேணி நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். கலையின்பன் தியாகராஜாக் குருக்கள் இராமையா தும்பளை, நெல்லண்டை அம்மன்கோவில் பருத்தித்துறை. அவர்களின் சபிண்டீகரண கிருத்தியம் 7- 10- 92 புதன்கிழமை நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நெல்லண்டை தகவல்
தும்பளை, க.சோமசுந்தரம் (அதிபர்)
பருத்தித்துறை சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜா
6- 10- 92 குருக்களும், சகோதரர்களும்

(3317)

## நினைவு கூருகின்றோம்...
## 06-10-1992

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை கும்புறுப்பிட்டிப் பகுதியில் தவறுதலாகத் துப்பாக்கி வெடித்ததில் எமைப் பிரிந்த -

**சான்டோ** (இராமு கனகசுந்தரம் பீலியடி, கன்னியா- திருக்கோணமலை)

விடத்தல்தீவுப் பகுதியில், சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். சாம்** (துரைரட்ணம் ஜெயரூபன் ஏழாலை தெற்கு - யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு இந்திய - சிறிலங்கா அரசுகளின் கூட்டுச்சதியை அம்பலப்படுத்தும் முகமாக சயனைட் உட்கொண்ட நிலையில், பலாலி இராணுவமுகாம் வைத்திய மனையில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ரகுவப்பா** (ராஜமாணிக்கம் ரகுநாதன் - பாலாவிச்குடியேற்றம், பொலிகண்டி, பருத்தித்துறை - யாழ்)

1988 ஆம் ஆண்டு மயிலங்காட்டில் தேசவிரோதிகளால் சுடடுக் கொல்லப்பட்ட -

நாட்டுப் பற்றாளரான -

**பொன்னம்பலம்**

மட்டக்களப்பு - காங்கேயனோடைப் பள்ளிவாசலில் வைத்து இந்தியப் படையினரால் சுட்டுச்கொல்லப்பட்ட உபதபாலதிபரான தமிழ்ப்பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு பரந்தன் - 5 ஆம் வாய்க்காலில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர்;

**ரகு** (நவரத்தினம் நடனசிகாமணி - 12, உருத்திரபுரம்- கிளிநொச்சி)

நாட்டுப்பற்றாளர்களான -

**குமார்** (கறுப்பையா குமாரராசா - நீவில் உருத்திரபுரம் - கிளிநொச்சி)

**ரவி** (தர்மலிங்கம் ரவீந்திரன் உருத்திரபுரம் - கிளிநொச்சி)

1991 ஆம் ஆண்டு பூநகரி, ஆலங்கேணிப் பகுதியில் சிறிலங்கா விமானத் தாக்குதலின் போது பலியான தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5166)

சிந்தனைக்கு

**நாம் விரும்புவதை நம்பிக்கையுடன் எதிர் நோக்க வேண்டும்** ஆனால், நமக்கு நேர்ந்து விடுவதை தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

- ஸெனெகா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06- 10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# அடுத்த சந்ததி போராட வேண்டுமா?

"வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதையே நான் விரும்புகிறேன். இப்போராட்டம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதைத் திட்டவட்டமாக என்னால் எதையும் கூறிவிட முடியாது. ஒரு சந்ததியிடம் இருந்து இன்னுமொரு சந்ததிக்கு இப்போராட்டம்கைமாறும் நிலை ஏற்பட்டு விடக் கூடாது'' இவ்வாறு பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டியளிக்கையில் வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா உளப்பூர்வமாக நிதர்சன நிலையைப் புரிந்து இக் கருத்தைத் தெரிவித்திருப்பாரேயானால் இது வரவேற்கத்தக்கது. ஆனால், இக்கருத்தை தெரிவித்துவிட்டு இராணுவ நடவடிக்கைகளுக்குத் திட்டமிடுவதும், தாக்குதல்களை முடுக்கி விடுவதும், அல்லது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாது, அரசாங்கத்தின் இழுத்தடிப்புக்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதும் ஒருபோதும் தனது கருத்திற்கு வலுச் சேர்க்கப் போவதில்லை என்பதை மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை எனக்குறிப்பிட்டது போல் கடந்த காலத்திலும் இது குறித்து இராணுவ அதிகாரிகள் சிலர் பேசியுள்ளனர் அண்மையில், இராணுவத்தளபதி சிசில் வைத்தியரெட்ணா முழுமையான இராணுவ வெற்றி சாத்தியப் பாடானதொன்றல்ல எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இதுவரை இராணுவம் ஈட்டிக் கொண்டதாகப் பெருமை பேசிக் கொண்ட வெற்றிகள் குறித்தும், கேள்விகள் எழும்பியுள்ளன அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ள விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவத்திற்குப் பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தியுள்ளதோடு தொடர்ந்து இவ்வாறான இராணுவ இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியுமா எனவும் சந்தேகங்கள் எழத் தொடங்கியுள்ளன.

இன் நிலையில் இனப்பிரச்சினைக்கு இராணு

# கண்டற் காடுகள் அழிப்பும் சூழலில் அதன் பாதிப்பும்

நாகர்கோயில்

தமிழரின் ஆதிக்குடிகளான நாகர்கள் வாழ்ந்ததைப் பறைசாற்றும் ஒரு வரலாற்றுச் சின்னம்.

யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து விறகு வெட்டிகள் இன்று முன்னெப்போதும் இல்லாதவாறு இப்பகுதியை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

குடாநாட்டிற்கான தரைப் போக்குவரத்து இன்று போர் நடவடிக்கைகளினால் ஏனைய மாவட்டங்களில்இருந்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் வன்னிப்பிரதேசத்தில் இருந்து குடாநாட்டினுள்விறகுஎடுத்து வர முடியாத ஒரு நெருக்கடி நிலை தோன்றியுள்ளது. மின்சாரத்தடை வாயு எரிபொருள் தடை போன்ற சிறிலங்கா அரசின் பொருளாதார முற்றுகையும் ஏனைய பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து குடாநாட்டினுள் சேரும் மக்கட் தொகையின் பெருக்கமும் விறகுச்கான தேவையைப் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஆலயத்தை அண்டிய பகுதிகளை வடமராடசிக் கடனீரேரி ஊடறுத்துச் செல்கின்றது. தொண்டமானாறே கடனீரேரியாக மண்டலாய் வரைக்குட் நீளுகின்றது ஆற்று நீரும் கடல் நீரும் கலக்கும் இக் கடனீரேரியை அண்டிய பகுதியே கண்டற் சூழலாகும்.

உயிரியல் நோக்கிலும், சூழலியல் நோக்கிலும் மட்டுமன்றிப் பொருளாதார நோக்கிலும் மிக முக்கிய பங்கு வகிக்கும் இச் சூழற் தொகுதி முன்னர் தொண்டமானாறு தொடங்கி மண்டலாய் வரைக்கும் சிறு பற்றைகளையும் பெரு மரங்களையும் கொண்ட காடுகளாகக் காணப்பட்டது. இது தொண்டமானாறில் இருந்து படிப்படியாக அழிக்கப் பட்டமையால் இது உள்ள இடம் மிகவும் குறுகியதாகி விட்டது.

குடாநாட்டில் வடமராட்சி கடனீரேரிப் பகுதியை தவிர, சேற்றுப் பகுதியான சுண்டிக்குளம், கிளாலி, கேரதீவு, மண்டைதீவு, ஆனையிறவுக் கடனீரேரிப் பகுதிகளிலும் இக்காடுகள் கணிசமான அளவு காணப்படுகின்றன. நாவாந்துறை, அராலி, பொன்னாலைப் பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மரங்கள் ..கண்டற் சூழல் இப்பகுதியிலும் இருந்ததென்பதை ஞாபகப் படுத்துகின்றன.

இக்காடுகள் களப்பு எனப்படுகின்றன, இங்கு இச் சூழலுக்கே உரித்தான (கண்ணா, இபிசீனியா) மரங்கள் அதிகளவில் காணப்படுவதால் கண்ணா காடுகள் எனவும் கண்டல் மரங்கள் (இரைசோபோரா) பெரும் எண்ணிக்கையில் காணப்படுவதால் கண்டற்காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

துரதிஷ்டவசமாக இக்களப்புக் காடுகளின் முக்கியத்துவம் இன்னமும் எம் மக்களால் உணரப்படவில்லை. மனிதன் தனது உடனடித்தேவையைப் பூர்த்தி செய்வதை மட்டும் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் பெரும் பயன் தரவேண்டிய இவ்வினத் தாவரங்களை விறகுத் தேவைக்காகவும் குடியேற்றத் திட்டங்களிற்கான சதுப்பு நில மீட்பு எனும் பெயரிலும் வெட்டி அழிக்கப்படுவது மனவருத்தத்திற்கு உரியது.

உதாரணமாக நாவாந்துறையில் உள்ள கண்ணாபுரம் எனும் கிராமம் முன்னர் கண்ணாத் தாவரங்கள் நிறைந்த பகுதியாகவும் அதிகளவு வெள்ளைஇறால் பிடிக்கப்படும் இடமாகவும் காணப்பட்டது. ஆனால் கண்ணா மரங்கள் அழிக்கப்பட்டு குடியிருப்புக்களை உருவாக்கிய பின்னர் இவ்விறால்கள் அருகிப்போய் விட்டன.

கால் பதித்தால் இடுப்பிற்கும் மேலாகவே புதையக் கூடிய சதுப்பு நிலத் தரையில் தொடர்ச்சியாக நீர் தேங்கும் சூழலில் இத் தாவரங்கள் காணப்படுவது இயற்கையை நேசிக்கும் எவர்க்கும் கண் கொள்ளாக் காட்சியாகும்.

இத்தாவரங்கள் தமதுவாழிடத்திற்கே உரித்தான அநேக சிறப்பியல்புகளை கொண்டுள்ளன. சேற்று மணலில் சரிந்து போகாதிருப்பதற்காகத் தாங்கும் வேர்களையும் மிண்டி வேர்களையும் உருவாக்குகின்றன. தரையில் தொடர்ச்சியாக நீர் தேங்குவதால் சுவாசித்தலில் உள்ள இடையூறை நிவர்த்திப்பதற்காக தரைக்கு மேலாகக் குத்திட்டு நிற்கும் முச்சுவேர்களை தோற்றுவிக்கின்றன இங்கேதான் தாய்த் தாவரத்தின் பழங்கள் இருக்கும்போதே வித்துக்கள் முளைத்துமகட்காவரங்களை தோற்றுவிக்கும் சீவச முறை முளைத்தல் என்னும் தோற்றப்பாடும் நிகழ்கின்றது. தனது வாழிடத்தினால் தனக்கு ஏற்படும இடையூறுகளை வெற்றிகரமாக சமாளிக்கும் இத் தாவரங்களால் மனிதனை மட்டும் சமாளிக்க இயலவில்லை

இந்தியாவில் தமிழ் நாட்டில் ''பிச்சாவரம்'' எனும் இடத்தில் உள்ள இதுபோன்ற கண்டற்காடுகள் எம். ஜி. ஆரின் ஆட்சிக் காலத்தில் சுற்றுலாக் கேந்திரமாக மாற்றப்பட்டது இக்காடுகளிலேயே எம். ஜி. ஆரின் இதயக்கனி திரைப்படத்தின் முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்டன, படகுகள் ஒன்றையொன்று துரத்தும் சண்டைக் காட்சி படமாக்கப்பட்டது. இப்படம் பட்டி தொட்டிகளில் எல்லாம் திரையிடப்பட்ட பின்பே இப்பகுதி பிரபல்யம் பெறத் தொடங்கியது. தற்போது வெளிநாட்டுக் காரர்களினால் இது அந்நிய செலவாணியை ஈட்டித் தரும் நிலையமாக மாறியுள்ளது.

இத் தாவரங்களில் காணப்படும் தாங்கு வேர்களினதும் மிண்டி வேர்களினதும் சுவாச வேர்களினதும் இடைப்பகுதி சிறுகடல்உயிரினங்கள் ஒளித்து வாழச் சிறப்பான அமைவிடமாகும். இந்தச் சிறு உயிரினங்களை உண்ண வரும் பறவை இனங்கள் பாதுகாப்பாக வாழவும் ஏற்ற இடமாக இப்பகுதி இருப்பதால் அவை இங்கேயே தங்கிவிடுகின்றனவேறுநாடுகளில் இருந்து வருடத்தில்சிலகுறிப்பிட்ட மாதங்களில் இக் காடுகளை நோக்கி பெருவாரியான சைபீரியன் தாராக்கள் போன்ற பறவையினங்கள் படையெடுத்து வந்தமையை இப்பகுதி மக்கள் இன்றுவாஞ்சையுடன் நினைவுகூருகின்றனர். இப் பறவையினங்கள் கூடத் தமது சுற்றுலாத் தலங்களை மாற்றுமளவிற்கு இப்பகுதி பாதிக்கப்பட்டுள்ளது- கடல் வாழ் உயிரினங்களுக்குரிய போசனையை வழங்குவதிலும் இக்காடுகள் பங்கேற்கின்றன இங்கு வாழும் பறவைகளின் எச்சங்களும் முதிர்ந்த தாவரக் கழிவுகளும் நீருடன்கலந்து நுண்ணங்கிகள் பெருக வாய்ப்பளிக்கின்றன. இந்நுண்ணுயிர்கள் சிறிய கடலுயிரிகளுக்கு உணவாகின்றன ஆழக்கடலில் இருந்து வரும் இறாற் குடம்பிகள் இத் தாவரச் சூழலில் தமது காளைப் பருவத்தை ஒளித்து வளர்ந்து கழிக்கின்றன. நிலவாழ், நீர்வாழ், ஈரூடகவாழ் உயிரினங்கள் ஒரே இடத்தில் தங்கி வாழக் கூடியதும் உயிர்ச் சூழலை இத்தாவரச்சூழல் வழங்குகின்றது-

ஆர்ப்பரித்தெழும் கடல் அலைகளினால் எம் வளம் மிக்க மண் கடலினுள் அரித்தெடுத்துச்செல்லப்படுவதனையும் இக்களப்புக் காடுகள் தானே தடுத்து நிறுத்துகின்றன.

இவ்வாறு இயற்கைக்குப் பல்வேறு வழிகளில் இக் களப்புக் காடுகள் உதவுவதோடு மனிதனின்தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன.

உறுதியானதும் பூச்சிகளின் தாக்கத்தை எதிர்க்கக் கூடியதுமான இம் மரங்களில் இருந்து தீராந்தி மரங்கள், மீன்பிடிக் கம்புகள், வளையங்கள், கப்பல் கட்டும் பலகைகள், உறுதியான கைப்பிடிகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

இரைசோபோரா இனத்தின் பட்டையும் அதன் வேறு சில பகுதிகளையும் அவித்து சாறு எடுக்கப்படும். இதுவே வலைச் சாயமாகும். இச் சாயத்தில் வலைகள் தோய்த்து பாவித்தால் வலைகள் உக்காமல் நீண்டகாலம் இருக்கும்.

புறூகைரா இனம் காயங்களிற்குரிய மூலிகையாகவும் அவிசீனியாவின் இலைகள் பசுந்தாட் பசளைகளாகவும் பயன்படுத்தக் கூடியவை.

பறவைகளின் இயற்கையான சரணாலயமாகப் பாவிக்கப் படக்கூடிய இத் தாவரப் பிரதேசம் உயிரியல் மாணவர்களின் ஆய்வு கூடமாகவும் அமைகின்றது.

உலக நாடுகள் பலவும் இத்தகைய காடுகளின் முக்கியத்துவங்களை அறிந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதுடன் பெறுபேறுகளை நூல்களாக வெளிக்கொணர்ந்தும் இதன் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடுகளைச் செய்தும் வருகின்றன இந்நூல் அந்நிய மொழியில் அமைந்ததாலும் மக்களுக்கு இதன் பயன்பாடுகள் தெரியப்படுத்தப் படாமையாலும் விறகுத்தேவைக்காகவும் குடியிருப்புக்களை ஏற்படுத்தவும் இக் காடுகள் வெட்டப்படுகின்றன.

இக்களப்புக் காடுகளைக் கொண்ட பிரதேசங்கள் தேவையற்ற பகுதிகளாகவோ அல்லது விலக்கப்பட்ட பகுதிகளாகவோ அல்லது சிறிதளவாக இவை இயற்கை எமக்களித்த மிகவும் வளம் நிறைந்த விலை மதிக்க முடியாத பிரதேசமாகும்.

தகவல்:
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

தென்பகுதி சிறைகளில்

## தடுப்புக்காவலில் இருக்கும் இருவரை விடுவிக்க உத்தரவு

காரணம் கூறாமல் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாமல் கடந்த பல மாத காலமாக தடுத்து வைக்கப்படிருந்த இருவர் விடுதலை செய்யப் படுவர் என தெரியவருகிறது.

ணம் விடுவிக்கப்படுவதை தான் எதிர்க்கவில்லை எனத் தெரிவித்தார்.

இரண்டாவது நபர் மட்டக் களப்பைச் சேர்ந்த தம்பி ராசா நல்லதம்பி என்பவராவார். இவரை விடுதலை செய்

## இஸ்ரேலிய விமானம் நொருங்கியது; 200 பேர் பலி; தொடர்மாடி சேதம்

(அமர்ஸ்ரடாம்)

இஸ்ரேலிய சரக்கு விமானம் ஒன்று நேற்று முன்தினமிரவு அமர்ஸ்ரடாம் நகருக்கு அருகே ஒன்பதுமாடி தொடர் சட்டடத்தின் மேல் விழுந்து

பகுதியில் பரவலாக பரவியுள்ளது.

டெல் அவிவ்விற்கு செல்லவிருந்த அந்த விமானத்தில் நான்கு விமானச் சிப்பந்திகள்

இருந்தார்கள். நூற்றுக்கணக்கிலான அம்புலன்ஸ் வண்டிகளோடு தீயணைப்புப் படையினர்கள் உதவிமீட்புப்பணி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வேண்டும்.

மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை எனக்குறிப்பிட்டது போல் கடந்த காலத்திலும் இது குறித்து இராணுவ அதிகாரிகள் சிலர் பேசியுள்ளனர் அண்மையில், இராணுவத்தளபதி சிசில் வைத்தியரெட்ணா முழுமையான இராணுவ வெற்றி சாத்தியப் பாடானதொன்றல்ல எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இதுவரை இராணுவம் ஈட்டிக் கொண்டதாகப் பெருமை பேசிக் கொண்ட வெற்றிகள் குறித்தும், கேள்விகள் எழும்பியுள்ளன அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ள விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவத்திற்குப் பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தியுள்ளதோடு தொடர்ந்து இவ்வாறான இராணுவ இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியுமா எனவும் சந்தேகங்கள் எழத் தொடங்கியுள்ளன.

இன் நிலையில் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு ஏற்புடைய தொன்றல்ல என இராணுவம் புரிந்து கொள்ளுமானால், அதாவது மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா விரும்புவது போல் அடுத்த சந்ததிக்குப் போராட்டம் கை மாறுவதைத் தவிர்க்க வேண்டுமானால் அரசியல்வாதிகளையும் இராணுவத்திலுள்ள தீவிர போக்குடையோரையும் தமிழர்களுக்கு ஏற்புடைய அரசியல் தீர்வொன்றைக்காணுமாறு வற்புறுத்த வேண்டும்

தமிழ் மக்கள் சமாதானமாக அதேவேளை சுய கௌரவத்துடன் வாழவே விரும்புகின்றார்கள். எவ்வாறு மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா அடுத்த சந்ததியிடம் (சிங்களவரிடம்) போர் கை மாறக் கூடாது என எண்ணுகின்றாரோ அதே போன்றே தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் தமது அடுத்த சந்ததியிடம் சுமைகளை இறக்கி விடவிரும்பவில்லை. இதனை தற்பொழுது அல்ல பல வருடங்களுக்கு முன்பே விடுதலைப்புலிகள் தெளிவாக வலியுறுத்தியும் உள்ளனர்

ஆனால், கடந்த காலத்தில் எமது மூதாதையர் சிங்களப் பேரினவாதத்தின் அடக்கு முறைக்கு உள்ளானது போல், எமது எதிர்காலச் சந்ததியும் சிங்களப் பேரினவாதத்தினால் ஒடுக்கப்பட்டு பாதுகாப்பின்றி சுய கௌரவமின்றி வாழ்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதித்து விடப்போவதில்லை அதாவது உரிமைக்காகப் போராட முற்பட்ட தற்போதைய சந்ததி போரின் சுமைகாரணமாக எதிர் காலச்சந்ததியிடம் சுமைகளை இறக்கி வைத்து விடப் போவதில்லை இச்சந்ததியே எதிர் கால சந்ததியின் பாதுகாப்பிற்காகவும் சுதந்திரத்திற்காவும் போராடி வெற்றி பெறவிரும்புகின்றது

இதேவேளை உரிமைக்கான போராட்டத்தில் இச்சந்ததி முழு வெற்றியைப் பெறத்தவறுமாயின் எதிர்காலச் சந்ததியும் போராடியே ஆகும். அது தவிர்க்க முடியாது ஏனெனில் எந்த ஓர் இனமும் தனது உரிமைக்காக தலைமுறைகள் கடந்தாயினும் போராடியே ஆகும். இதில் தமிழர்களோ அன்றி புலிகளோ விதிவிலக்கல்ல.

ஆகையினால், அடுத்த தலைமுறையினர்போராட வேண்டுமா இல்லையா என்பதை அடக்குமுறையாளர்களால் தீர்மானிக்க முடியும். இந்நிலையில் அடுத்தசந்ததி யுத்தத்தில் ஈடுபட வேண்டுமா? இல்லையா? என்பதை தீர்மானிக்க வேண்டியவர்கள் சிங்களவர்களே ஒளிய தமிழர்கள் அல்ல இதை மேஜர் ஜெனரல் புரிந்து கொண்டால் நல்லது.

---

விட்டது.

குடாநாட்டில் வடமராட்சி கடனீரேரிப் பகுதியை தவிர, சேற்றுப் பகுதியான சுண்டிக்குளம், கிளாலி, கேரதீவு, மண்டைதீவு, ஆனையிறவுக் கடனீரேரிப் பகுதிகளிலும் இக்காடுகள் கணிசமான இவ்வாறாக்கள் அருகிப்போய் விட்டன.

கால் பதித்தால் இடுப்பிற்கும் மேலாகவே புதையக் கூடிய சதுப்பு நிலத் தரையில் தொடர்ச்சியாக நீர் தேங்கும் சூழலில் இத் தாவரங்கள் காணப்படுவது இயற்கையை தொடங்கியது. தற்போது வெளிநாட்டுக் காரர்களினால் இது அந்நிய செலவாணியை ஈட்டித் தரும் நிலையமாக மாறியுள்ளது.

இத் தாவரங்களில் காணப்படும் தாங்கு வேர்களினதும் மிண்டி வேர்களினதும் சுவாச ஆர்ப்பரித்தெழும் கடல் அலைகளினால் எம் வளம் மிக்க மண் கடலினுள் அரித்தெடுத்துச்செல்லப்படுவதனையும் இக்களப்புக் காடுகள் தானே தடுத்து நிறுத்துகின்றன. எமக்களித்த மிகவும் வளம் நிறைந்த விலை மதிக்க முடியாத பிரதேசமாகும்.

தகவல்:
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

---

தென்பகுதி சிறைகளில்

## தடுப்புக்காவலில் இருக்கும் இருவரை விடுவிக்க உத்தரவு

காரணம் கூறாமல் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாமல் கடந்த பல மாத காலமாக தடுத்து வைக்கப்படிருந்த இருவர் விடுதலை செய்யப்படுவர் என தெரியவருகிறது. கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளியன்று மேற்கண்ட உத்தரவை பிறப்பித்துள்ளது.

கல்முனையைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியரான சிவஞானம் மனோரஞ்சனை விடுவிக்கக் கோரி மனைவி மரியமங்களம் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்திருந்தார். சிவஞானம் 90-ம் ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டு, முதலில் மகசீன் சிறைச்சாலையிலும், பின்னர் களுத்துறைச் சிறையிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்

ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும் அரச தரப்பு சட்டவாதி, ஆசிரியர் சிவஞானம் விடுவிக்கப்படுவதை தான் எதிர்க்கவில்லை எனத் தெரிவித்தார்.

இரண்டாவது நபர் மட்டக்களப்பைச் சேர்ந்த தம்பிராசா நல்லதம்பி என்பவராவார். இவரை விடுதலை செய்யும் படி கோரி மனைவி சிவபாக்கியம் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்திருந்தார்.

நல்லதம்பி கடைச் சிப்பந்தியாய் வேலை செய்து வந்தார் எனவும், ஒரு குழந்தைக்கு தகப்பன் எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 91-ல் கைது செய்யப்பட்ட இவரை விடுதலை செய்யும்படி உத்தரவிட வேண்டுமென மனுதார் கோரியிருந்தார்.

இவர் அடுத்த மாதம் 14-ம் திகதிக்கு முன்னர் விடுதலை செய்யப்படுவார் எனவும், இவரை விடுதலை செய்யும்படி ஏற்கனவே கோரியுள்ளதாகவும் அரச சட்டவாதி தெரிவித்தார்.

உணவுமுத்திரை பெறுபவர்களுக்கான

## வருமான எல்லையை அதிகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

உணவு முத்திரை பெறுபவர்களுக்கான வருமான எல்லை 750 ரூபாவிலிருந்து அதிகரிக்கப்பட வேண்டுமென கேகாலை எம.பி. அதாவுட செனவிரத்ன கடந்த புதன் கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் 1978 ஆம் ஆண்டு அமெரிக்க டாலரின் பெறுமதியைக் கொண்டு வருமான எல்லை ரூபா 750 நிர்ணயிக்கப்பட்டது அப்பொழுது அமெரிக்க டாலர் ஒன்றின் விலை 32 ரூபாவாக இருந்தது இப்பொழுதுஅதன் பெறுமதி 42 ரூபாவாக உயர்ந்துள்ளது. ரூபாவின் மதிப்பு தற்போது குறைந்துள்ளது. எனவே இதன் தொகை அதிகரிக்கப்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## போதைபொருள் கடத்தலில் அரசியல்வாதிகள் தொடர்பு

- அத்தாவுட

நாட்டில் அதிகரித்து வரும் போதைப் பொருள்களைக் கடத்துவதிலும் அவற்றை விற்பனை செய்வதிலும் சில முன்னணி அரசியல் வாதிகள் பின்னணியில் இருப்பதாக கேகாலை மாவட்ட எம். பி திரு. அத்தாவுட செனிவிரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலபேர்பாட்டுஅமைச்சுக்கான குறைநிரப்புத் தொகை பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறியதாவது போதைப பொருள் தடை செய்வதில் அரசாங்கம் அதனைக் கையாளுவோருக்கு எதிராகக் கடுமையான தண்டனையை அமுல்படுத்த வேண்டும் என்றார்.

---

# இஸ்ரேலிய விமானம் நொருங்கியது; 200 பேர் பலி; தொடர்மாடி சேதம்

(அமர்ஸ்ரடாம்)

இஸ்ரேலிய சரக்கு விமானம் ஒன்று நேற்று முன்தினமிரவு அமர்ஸ்ரடாம் நகருக்கு அருகே ஒன்பதுமாடி தொடர் சட்டடத்தின் மேல் விழுந்து நொருங்கியதால் இருநூறுக்கும் அதிகமானோர் உயிர் இழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போயிங் 247 ரக ஜெட் விமானமே இவ்வாறு விழுந்து நொருங்கியதாகவும்,

அமர்ஸ்ரடாம் ஷிபால் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற சற்று நேரத்தில்இயந்திரக்கோளாறு ஏற்பட்டது என்றும், விமான நிலையத்திற்கே திரும்பி வருவதற்கு அதன்விமானி முயற்சி செய்து கொண்டிருந்த நேரத்தில் அந்த விமானம் விபத்துக்குள்ளாகி பல மாடிக் கட்டடத்தில் போய் விழுந்தது என்றும தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் உள்ள பல கட்டடங்கள் தீயினால் சூழப்பட்டுள்ளன என்றும் விமான எரிபொருளின் கொழுந்துவிட்டெரியும் தீப்பிழம்பு மக்கள் அதிகமாக உள்ள குடியிருப்புப் பகுதியில் பரவலாக பரவியுள்ளது.

டெல் அவிவ்விற்கு செல்லவிருந்த அந்த விமானத்தில் நான்கு விமானச் சிப்பந்திகள் இருந்தார்கள். நூற்றுக்கணக்கிலான அம்புலன்ஸ் வண்டிகளோடு தீயணைப்புப் படையினர்கள் உதவிமீட்புப்பணி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## அமெரிக்காவுடன் நல்லுறவு; வியட்நாம் அறிவிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவுடன் சுமுக இராஜதந்திர உறவை ஏற்படுத்திக் கொள்ள தமது நாடு விரும்புவதாக வியட்நாமிய வெளியுறவு மந்திரி நுக்யின் மன்கம் ஐ நா. பொதுச்சபையில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் சுமுக உறவுக்கு சாத்தியமான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருப்பதாக தெரிவித்த வியட்நாமிய அமைச்சர் வியட்நாம் யுத்தத்தில் காணாமற் போனவர்களது விவகாரத்தை பேசித்தீர்க்க முடியும் என்றும்,

இருநாடுகளுக்கும் இடையில் சுமுக உறவு ஏற்படுவதன் மூலம் அமெரிக்க வியட்நாமிய மக்கள் மாத்திரம் நன்மையடையமாட்டார்கள். தென்கிழக்காசியாவின் முழு மக்களுமே நன்மையடைவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

கடந்த காலத்தின் பழைய சரித்திரங்களை மறந்து புதிய எதிர்காலத்தை நோக்கிய அத்தியாயத்தை காண்பதற்கு வியட்நாம் விரும்புகிறது.

உலகில் பல்வேறு கண்டங்களுடன் இராஜதந்திர உறவை வளர்ப்பதற்கே விரும்புகிறோம் அதேவேளை கடந்த காலங்களில் தொடர்பற்றிருந்த நாடுகள் பலவற்றுடன் புதிய உறவை எதிர்பார்க்கிறோம் குறிப்பாக தென்பசுபிக், வளைகுடா, லத்தீன், அமெரிக்க பிராந்தியத்தில் நாடுகள் பலவற்றுடன் புதிய உறவை வளர்க்க விரும்புகிறோம். இந்த அடிப்படையில் அமெரிக்காவுடன் இராஜதந்திர உறவை வளர்த்து முன்னெடுத்துச் செல்வதற்குவிரும்புகிறோம்.

எமது மனிதாபிமான கொள்கையின்படி அமெரிக்காவுடன் சாத்தியமான உறவை பேணி வளர்ப்பதற்கே விரும்புகிறோம். எமது விருப்பம்அமெரிக்க மக்களால் வரவேற்கப்படுகிறது வியட்நாமிய யுத்தத்தின் போது காணாமற்போன யுத்த வீரர்களது விவகாரமே எமது இருநாடுகளினதும் உறவை விருத்தி செய்ய முடியாதிருப்பதற்கான காரணமாக தென்படுகிறது. இதைப் பேசித் தீர்த்துக் கொள்ளமுடியும் என்றும் அவர் தமதுரையில் குறிப்பிட்டார்.

## சிலியில் வரலாற்றுப் புத்தகங்கள் தீயிடப்பட்டன

(சந்தியாகோ)

சிலியில் வரலாற்றுப் புத்தகங்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தின் விளைவாக இரண்டு சிலிவாழ் இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர். சிலி கல்வி அமைச்சுக்கு வெளியில் இந்த தீ வைப்புச் சம்பவம் இடம் பெற்றது.

அரசு தம்மீது பாகுபாடு காட்டுவதாகவும். தமது மூதாதையர்களது நிலங்களை திருப்பித் தருமாறும் கோரியே அடையாள எதிர்ப்பாக இவர்கள் வரலாற்றுப்புத்தகங்களை எரித்தனர் என்றும் கூறப்படுகிறது.

## ராஜீவ் கொலை வழக்கு நவம்பரில் விசாரணை

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை விசாரணை எதிர்வரும் நவம்பர் மாத முதல் வாரத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கொலை தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்கென சென்னை அருகே பூந்தமல்லியில் பலத்த பாதுகாப்புடன் கூடியதாக நீதிமன்றம் அமைக்கப்படுவது தெரிந்ததே இது தொடர்பாக மத்திய புலனாய்வுத் துறையின் விசேட குழுத் தலைவர் கார்த்திகேயன் தெரிவித்திருப்பதாவது, இந்தக் கட்டடம் பலவகை பாதுகாப்புடன் கட்டப்பட்டுள்ளது. நவம்பர் மாத முதல் வாரத்தில் விசாரணை ஆரம்பமாகும்.

ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பான வாக்கு மூலங்கள் எல்லாம் தமிழில் இருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் பொறுப்பை எஸ். ஐ டி. யிடம் விஷேட நீதிமன்றம் அளித்துள்ளது. தற்போது இப்பணி முடியும் தறுவாயில் உள்ளது என்றார்.

ஈழநாதம்

# ஜே. வி. பி. யினரின் 3 ஆவது முயற்சி முறியடிப்பாம்

(மாத்தறை)

ஜே வி. பி. இயக்கத்தினர் மீண்டும் தென்னிலங்கையில் தமது நடவடிக்கைகளை எடுக்க மேற்கொண்ட முயற்சிகள் பொலிசாரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

''இரண்டாவது முறையும் நாம் தோல்வியுற்றோம் மூன்றாவது தாக்குதலுக்கு ஆயத்தமாகுங்கள்'' என்ற வசனம் எழுதப்பட்ட கடிதம் ஒன்றை பொலிசாரால் தேடப்பட்டு வரும் முக்கிய நபர் ஒருவர் தமது சகாவுக்குஎழுதியுள்ளார் அக்கடிதம் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிசாரால் கைது செய்யப்பட்ட பிரியந்த விஜேவீர என்பவர் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஜே வி. பியினரின் புதிய திட்டம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவர் அளித்த தகவலின் அடிப்படையில் காட்டினுள் கிடங்கொன்றில் கிறீஸ் பூசப்பட்டு புதைத்து வைக்கப்பட்ட ஒரு தொகுதி ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன. இவர் பத்து கொலைச் சம்பவங்கள் மற்றும் நாகுலுகமுல மக்கள் வங்கியில் 5 இலட்சம் கொள்ளை தொடர்பாக தேடப்பட்டுவந்தவராவர்.

இவரது தகவலை அடுத்து ரங்கா என்பவர் தனது சகாவுக்கு எழுதிய கடிதம் பொலிசாரின் கையில் சிக்கியுள்ளது இப்போது பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

26 நவீன ரக துப்பாக்கிகள், 6 உள்ளூர் துப்பாக்கிகள், சிங்க ரெஜிமெண்ட் படையினர் பயன்படுத்தும் சீருடைகள், வெற்றுத் தோட்டாக்கள் சன்னங்கள், குண்டுகளின் பாகங்கள் ஆகியனவும் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## "குமாரி" இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் ''குமாரி'' கப்பல் கொழும்பிலிருந்து இன்று பருத்தித்துறை நோக்கி புறப்படும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

எனினும் கொழும்பில் தற்பொழுது பெய்துவரும் பெருமழையினால் கப்பல் புறப்படுவதில் தாமதம் ஏற்படக்கூடும் எனவும் இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

## மாவீரர்

வெள்ளியன்று 4 மணிக்கு கிளிநொச்சி கந்தசாமி கோவில் அருகாமையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. நகரம் முழுவதும் தோரணங்கள் கட்டி நிறைகுடங்கள் வைத்து மக்கள் தமது வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டனர்.

(16)

## விடுதலைப்

றன.

பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவலடிப்படையில் இச்செய்தியாளர் மேலும் தெரிவிக்கையில் வெற்றிலைக் கேணிப் பகுதியில் இருந்து இராணுவத்தினரைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என ஒரு பகுதி இராணுவ அதிகாரிகள் வாதிட்ட போதும் சில உயர் அதிகாரிகள் இதை எதிர்த்து நின்றதாகவும் தெரிகின்றது. எனினும், கடந்த வெள்ளியன்று கட்டைக்காட்டில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்பின்னர்நிலைமை முற்றாக மறுபரீசீலனைக்கு உட்படுத்த வேண்டியுள்ளதாகவும்தெரிவித்துள்ளார்.

## குடிமனைகள்

களைகள் இப்பகுதி நோக்கி வீசப்பட்டன. இதனால் பொதுமக்களின் சில வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இதே வேளை நேற்றுமுன்தினம் இரவு தொடர்ச்சியாக பரா வெளிச்சக் குண்டுகள் இராணுவத்தினரால் சுடப்பட்டன ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ச்சியாக இக்குண்டுகள் ஏவப்பட்டமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் நள்ளிரவில் தெல்லிப்பளை பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

(பா), (09)

## கிளிநொச்சி

தினைச் செலவழித்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அல்லது வவுனியாவிற்கு அப்பால் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(16)

## ஹெலியின்

களை தேடிச் சென்றவர்களால் படகு கரைசேர்க்கப் பட்டது எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இவர்களில் பெஞ்சமின் என்பவரது உடலில் மிகவும் மோசமான சூட்டுக் காயங்கள் காணப்பட்ட தாக தெரியவருகிறது

## தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு - 1992

### நேர அட்டவணை

| திகதி/தினம் | முற்பகல் வேளை | பிற்பகல் வேளை |
|---|---|---|
| 92 - 10 - 27 செவ்வாய் | 1. தமிழ் மொழியும் இலக்கியமும் i 8.30 - 9.15 ii 9.45 - 11.45 | 1. தமிழ் மொழியும் இலக்கியமும் iii 1.00 - 03.00 |
| 92 - 10 - 28 புதன் | 8. ஆங்கிலம் i 8.30 - 9.30 ii 9.45 - 11.45 | 5 - 7 சமயம் i 1.00 - 2.00 ii 2.15 - 4.15 |
| 92 - 10 - 29 வியாழன் | 2. கணிதம் ii 8 30 - 11.30 | 2. கணிதம் i 01.00 - 2.00<br>22. தட்டெழுத்து தொகுதி i 2.15 - 4 15 |
| 92 - 10 - 30 வெள்ளி | 3. விஞ்ஞானம் ii 8 30 - 11.30 | 3. விஞ்ஞானம் i 1 00 - 2.00<br>22. தட்டெழுத்து தொகுதி ii 2.15 - 4.15 |
| 92 - 10 - 31 சனி | 4. வரலாறும் சமூகக்கல்வியும் ii 8.30-11.30 | 4. வரலாறும் சமூகக்கல்வியும் i 1.00 - 2.00<br>22. தட்டெழுத்து தொகுதி iii 2.15 - 4.15 |
| 92 - 11 - 02 திங்கள் | 12 - 20 தொழினுட்பப் பாடம் i 8·30 - 9.30 ii 9 30 - 11.30<br>22. சுருக்கெழுத்து 9 00 முதல்<br>21. வர்த்தகமும் கணக்கியலும் ii 8.30 - 11 300 | 21. வர்த்தகமும் கணக்கியலும் i 1.00 - 2.00 |
| 92 - 11 - 03 செவ்வாய் | 9 - 11 அழகியல் i 8.30 - 9 30 ii 10.00 - 12.00 | 8. அழகியல் - சித்திரம் iii 1.00 - 3.00 |

## பல்லாயிரக்

சங்கர் ஆகியோர் நினைவுத் தூபிக்கு மலர்மாலை சாத்தி அஞ்சலிசெலுத்தினர். தொடர்ந்து ''தீருவில் தீ'' என்ற நூலை விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெற்றன

எமது மக்களைக் காக்க இந்தியா ஒரு தேவதூதர் அல்ல, எமக்கு நாமே பாதுகாப்பு. எமது போராட்டத்தை நாமே முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உண்மையை எமது போராளிகளது தியாகம் எமது மக்களுக்கு உணர்த்தியது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் கல்விக் குழுப் பொறுப்பாளர் திரு. யோகிகூறினார்.

திரு. யோகி தொடர்ந்து பேசும் போது இந்திய அரசு எமது மக்களுக்கு உதவுவதாகவும், எமது மக்களைப் பாதுகாக்க முன்வருவதாகவும் கூறி இந்தியப் படைகளை இங்கு அனுப்பியது ஆனால் இங்கு வந்த இந்தியப்படை மிகக் கேவலமான கீழ்த்தரமான நடவடிக்கைகளில் இறங்கியது. இந்தியப்படை இங்கு இருக்கும் போதே தமிழீழத் தாயகத்தில் பாரிய சிங்களக் குடியேற்றமும் நிகழ்ந்தது இவற்றுக்கு இந்தியப்படை துணை போனது. இவ்வாறான சூழ்


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சேதுப்பிள்ளை அருணாசலம்

**3-10-1992 அன்று காலமானார்**

காரைநகரைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் அம்பலவாணர் அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும் கிளிநொச்சி D-7 வசிக்கும் அருணாசலம், சுப்பிரமணியம் கிளிநொச்சி, புதுமுறிப்பில் வசிக்கும் அருணாசலம், லோகநாதன் கிளிநொச்சி ராஜன் ரெக்ஸ்ரையில் உரிமையாளர், அருணாசலம் அம்பலவாணர் (மாணிக்கம்) காரைநகர் பாலாவோடை கணேசபிள்ளை, யோகாம்பிகை (ஆச்சி) ஆகியோரின் அன்புத்தாயாரும், கிளிநொச்சி D-7 சுப்பிரமணியம் இராஜேஸ்வரி கிளிநொச்சிபுதுமுறிப்பில்வசிக்கும் லோகநாதன் மோகனாம்பிகை கிளிநொச்சிதிருநகர் காலஞ்சென்ற மாணிக்கம் சரஸ்வதி காரைநகர் பாலாவோடை அருணாசலம் கணேசபிள்ளை கிளிநொச்சிகணேசபுரம் அம்பலவாணர் (மாணிக்கம்)பவளராணிஆகியோரின் மாமியாரும் ஆவார் அன்னாரின்ஈமக்கிரியை 4-10-92 அனறு ஞாயிற்றுககிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
அ. சுப்பிரமணியம்
தவராசா D-7
கிளிநொச்சி.

(8320)



### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை, தலைமையகம்

## "இருட்டில் ஒளி ஏற்றுவோம்"

''இறந்தவர், சுடுபட்டோர், பிடிபட்டோர், காணாமற் போனோர், குடும்பங்களை காப்பது, உணவளிப்பது, நிவாரணம் கொடுப்பது, சின்னவர் பெரியவர் பேதமின்றி என்றைக்கும், செஞ்சிலுவை நிவாரணப் பிரிவுகள் 14ன்கிலும் உண்டு.''

### உங்கள் தேவை இவற்றுக்கு அவசியம்


கொடிவாரம் 1992 ஒக்ரோபர் 7-ம் திகதி முதல் 15-ம் திகதி வரை எங்கள் உறுப்பினர் உங்கள் வீடு வருவார்கள். உங்கள் அன்புக்காக, அன்பளிப்புக்காக வாரி வழங்குங்கள் - நம் மக்கள் வாழ்வுக்காக வாரி வழங்குங்கள்!

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 05.10 92.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

(5172)


## ஓராண்டு நினைவஞ்சலி




## வேலைவாய்ப்புக்கள்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

### 1. நிர்வாக அலுவலர்

இத்துறையில் அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்கள் தமது திறமைகளை நிரூபிக்கக் கூடிய ஆவணங்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். தமிழில் பணியாற்றக் கூடிய திறமையும், கலை, இலக்கிய, பத்திரிகைத்துறை அனுபவம் இருப்பின் மேலதிக தகைமை

இலும் உண்டு.''

## உங்கள் தேவை இவற்றுக்கு அவசியம்

கொடிவாரம் 1992 ஒக்ரோபர் 7-ம் திகதி முதல் 15-ம் திகதி வரை எங்கள் உறுப்பினர் உங்கள் வீடு வருவார்கள். உங்கள் அன்புக்காக, அன்பளிப்புக்காக வாரி வழங்குங்கள் - நம் மக்கள் வாழ்வுக்காக வாரி வழங்குங்கள்!


73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
05.10 92.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை

(5172)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



ஜேர்மனியில் அகாலமரணமடைந்த

**தர்மலிங்கம் செளந்தர்ராஜன்**
**செளந்தர்ராஜன் விஜயகுமாரி**
**செளந்தர்ராஜன் சபீலா**

| அன்னைமடியில்: | இறைவனடியில்: |
|---|---|
| 20-03-1958 | 18-10-1991 |
| 14-09-1965 | 18-10 1991 |
| 02-12-1985 | 18-10-1991 |

திதி 06-10-1992

கண்ணிறைந்த கட்டழகா எங்கள் ராஜனே
மணம் முடித்து மாலை சூடி மங்கை விஜி
தன்னுடனே மான்பான ஜேர்மனியில்
மேன்மையுற வாழ்கையிலே
வண்ணமயில் வடிவழகி வந்துதித்தாள்
சபிலாவும் கண்மணிகள் மூவருமாய்
சுவிஸ் நாட்டின் அக்கா அத்தான்
குடும்பத்தோடுறவாட எண்ணியே
செல்கையிலே மூவருக்கும் வந்த
வண்டி கதை முடித்து வைத்ததுவோ
ஆண்டொன்று சென்றதையோ
அன்னை சிந்தும் கண்ணீருக்கு
அணைபோட முடியவில்லையே

மோகன் வீதி,
(கலட்டி வீதி)
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தந்தை, தாய்,
சகோதரங்கள்,
மச்சான்மார்,
மருமக்கள்.

(3319)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

---

உட்படுத்த வேண்டியுள்ளதாகவும்தெரிவித்துள்ளார்.

### கிளிநொச்சி

தினைச் செலவழித்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அல்லது வவுனியாவிற்கு அப்பால் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(16)

---

## வேலைவாய்ப்புக்கள்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. நிர்வாக அலுவலர்

இத்துறையில் அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்கள் தமது திறமைகளை நிரூபிக்கக் கூடிய ஆவணங்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். தமிழில் பணியாற்றக் கூடிய திறமையும், கலை, இலக்கிய, பத்திரிகைத்துறை அனுபவம் இருப்பின் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும். வயதுக் கட்டுப்பாடு கிடையாது

### 2. ஒளிப்பதிவுக் கருவி (வீடியோகமரா) இயக்குனர்

ஒளிப்பதிவுக் கருவியை திறமையாகவும் கலையம்சத்துடனும் இயக்கும் ஆற்றலும், அனுபவமும் உள்ளவராக இருத்தல் அவசியம். திறமைகளை நிரூபிக்கக் கூடிய ஆவணங்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 16-10-92

விளம்பர இலக்கம் 170
மே/பா ஈழநாதம்
யாழ்ப்பாணம்.

[சி-5173]

---

## முக்கிய அறிவித்தல்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ. உ.)

## கிளைக் குழுத் தேர்தல்

09-09-92-ல் நடைபெற இருந்த மேற்படி தேர்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாகப் பிற்போடப்பட்டிருந்தது. தேர்தல் உத்தியோகத்தர் திரு. எ. சின்னத்தம்பி அவர்களின் 29-09-92-ம் திகதிய கடிதப் பிரகாரம் எமது சங்கத்தின் மேற்படி தெரிவு தொடர்பாக நியமனப் பத்திரங்கள் 10-10-92-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 00 மணி தொடக்கம் 10 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். போட்டி ஏற்படும் கிளைக் குழுக்களுக்கான தேர்தல் 17-10-92 சனிக்கிழமை நடைபெறும்.

இராணுவ நடவடிக்கைகள்காரணமாக இடம்பெயர்ந்த கிளைக்குழுக்களுக்கான நியமனப் பத்திரம் ஏற்றல் கீழ் தரப்படும் இடங்களில் நடைபெறும். ஏனைய கிளைக் குழுக்களுக்கான நியமனப்பத்திரம் ஏற்றல் அவ்வக் கிளை நிலையங்களில் நடைபெறும். போட்டி ஏற்படும் பட்சத்தில் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொண்ட இடங்களில் தேர்தல் நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

| கிளையின் பெயர் | கிளை இல. | நடைபெறும் இடம் |
|---|---|---|
| பொன்னாலை | 10 | கிளை 12 தொல்புரம் |
| நெல்லியான் | 12 ஏ | கிளை 12 தொல்புரம் |

பொ. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்
சங்கானை ப.நோ.கூ. சங்கம்.

(சி-5174)

---

ஹெலியின்

களை தேடிச் சென்றவர்களால் படகு கரைசேர்க்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பெஞ்சமின் என்பவரது உடலில் மிகவும் மோசமான சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக தெரியவருகிறது

---

எமது போராட்டத்தை நாமே முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உண்மையை எமது போராளிகளது தியாகம் எமது மக்களுக்கு உணர்த்தியது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் கல்விக் குழுப் பொறுப்பாளர் திரு. யோகிகூறினார்.

திரு. யோகி தொடர்ந்து பேசும் போது இந்திய அரசு எமது மக்களுக்கு உதவுவதாகவும், எமது மக்களைப் பாதுகாக்க முன்வருவதாகவும் கூறி இந்தியப் படைகளை இங்கு அனுப்பியது ஆனால் இங்கு வந்த இந்தியப்படை மிகக் கேவலமான கீழ்த்தரமான நடவடிக்கைகளில் இறங்கியது. இந்தியப்படை இங்கு இருக்கும் போதே தமிழீழத் தாயகத்தில் பாரிய சிங்களக் குடியேற்றமும் நிகழ்ந்தது இவற்றுக்கு இந்தியப்படை துணை போனது. இவ்வாறான சூழ்நிலையிலேயே தியாகி திலீபன், மற்றும் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளது தியாக மரணங்கள் எமது விடுதலையை நாமே போராடிப் பெற வேண்டும் என்ற பாடத்தைக் கற்பித்தது என்றார்.

கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு மறவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வன்னி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு மனோ பேசும்போது எமது போராளிகளதும் மக்களதும் வலுவான தன்னம்பிக்கையும், தளராத உறுதியும் வல்லாதிக்க வல்லூறுகளின்சிறகுகளை உடைத்தெறிந்தது இதனால் இன்று எமது மண் தலை நிமிர்ந்து நிற்கிறது.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பேசும்போது எமது போராட்ட வரலாற்றில் நாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளே எமது போராட்டத்தை வளர்க்கவும், வளம்படுத்தவும் உதவுகிறது என்றார்.

மேலும் கலை பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. தேவர், நீதித்துறைப் பொறுப்பாளர் திரு பரா, தமிழீழப் பெண்கள் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி சுடர், வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

---

### யாழ்.

இத்தகைய படிவங்களே கடந்த மூன்று மாதங்களாக யாழ். போதனா வைத்திய சாலையில் பிறப்பு, இறப்பு பதிவுக் காரியாலத்தில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(11) (09)

---

பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் அம்பலவாணர் அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும் கிளிநொச்சி D-7 வசிக்கும் அருணாசலம், சுப்பிரமணியம் கிளிநொச்சி, புதுமுறிப்பில் வசிக்கும் அருணாசலம், லோகநாதன் கிளிநொச்சி ராஜன் ரெக்ஸ்ரையில் உரிமையாளர், அருணாசலம் அம்பலவாணர் (மாணிக்கம்) காரைநகர் பாலாவோடை கணேசபிள்ளை, யோகாம்பிகை (ஆச்சி) ஆகியோரின் அன்புத்தாயாரும், கிளிநொச்சி D-7 சுப்பிரமணியம் இராஜேஸ்வரி கிளிநொச்சிபுதுமுறிப்பில்வசிக்கும் லோகநாதன் மோகனாம்பிகை கிளிநொச்சிதிருநகர் காலஞ்சென்ற மாணிக்கம் சரஸ்வதி. காரைநகர் பாலாவோடை அருணாசலம் கணேசபிள்ளை கிளிநொச்சிகணேசபுரம் அம்பலவாணர்(மாணிக்கம்)பவனிராணிஆகியோரின் மாமியாரும் ஆவார் அன்னாரின்ஈமக்கிரியை 4-10-92 அன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
அ. சுப்பிரமணியம்
தவராசா D-7
கிளிநொச்சி.

(8320)

---

## முத்துக்கிருஸ்ணர் மகாலிங்கம்

மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உப்புக்கேணியடி, கச்சாய் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான மீசாலை, வீரசிங்கம் மகா வித்தியாலய, இளைப்பாறிய ஆசிரியர் திரு முத்துக்கிருஸ்ணர் மகாலிங்கம் அவர்கள் 05-10-1992 இல் காலமானார்

அன்னார் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும், திருமதி மலர்விழி சந்திரதாஸ் (ஜேர்மனி), திரு. ம. சொர்ணலிங்கம் (T. A. ஓமான்), செல்வி ம கயல்விழி, திரு. ம. பாஸ்கரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும், திரு. கோ. சந்திரதாஸின் (ஜேர்மனி), அருமை மாமனும், கிரித்திகா, கிருசாஷ்த் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (06-10-1992) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. கயல்விழி,
(மகள்)

உப்புக்கேணியடி,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(சி-5175)

---

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 05-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5996

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

22-2681, 24-2681, 41-9038, 26-2745, 26-525, 26-6417, 24-7360, 27-6821, 41-2659, 40-4760, 25-9992.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்

24-2879, 24-6739, 24-3071, 27-7993, 24-336, 27-4070, 26-616, 26-1019, 27-5822, 42-0970, 26-6775, 24-207, 40-7541, 24-5877, 24-5029, 27-5187, 27-9825, 41-1111